# மணம் வீசும் மதுரை மலர்கள்

அக் 13, 2016 01:06 AM

FOLLOW US ON Google News
Share
Tweet
Share
Share



பூக்களே கொஞ்சம் ஓய்வெடுங்கள்... பறிக்கும் போது கூட மணம் வீசி, சிரிக்கும் பூக்களுக்கு ஏது ஓய்வு... இறைவன் முதல் பெண்களின் கூந்தல் வரை இடம் பிடித்து உதிரும் பூக்களின் உழைப்பு மகத்தானது.

மணக்கும் பூக்களுக்கு தன் உழைப்பால் உயிர் கொடுக்கும் விவசாயிகளின் வாழ்க்கை தான் மணம் வீச மறுக்கிறது. இருந்தாலும், மலரும் மலர் முகம் பார்த்து கஷ்ட, நஷ்டத்தை தாங்கி இஷ்டப்பட்டு உழைப்பதில் விவசாயிகளுக்கு நிகர் விவசாயிகள் தான். இத்தனை
பெருமையுள்ள மலர்களின் விளைச்சல், விற்பனை மதுரையில் எப்படி... மலர் உற்பத்தியில் முன்னேற நாம் என்ன செய்ய வேண்டும்... போன்ற வினாக்களுக்கு விடைகளாய் மலர்கிறது...

மலர்களின் ராணி மதுரையின் பெருமைக்கு சில வரலாற்று அடையாளங்கள் இருப்பது போல், மற்றொரு சிறப்புக்கு உலகெங்கும் வாசம் சூட்டுவது மல்லிகை. அதில் குண்டுமல்லி பிரசித்தம். அதனால் தான் 'மலர்களின் ராணி' என இது கிரீடம் சூட்டியுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 28,600 எக்டேரில் தோட்டக் கலை பயிர்கள் சாகுபடி நடக்கிறது. இதில் 2,100 எக்டேரில் மலர் சாகுபடி. மல்லிகை மட்டும் 1,400 எக்டேர். மாவட்டத்தில்

மல்லிகை, ரோஜா, கோழிக்கொண்டை, செவ்வந்தி, சாமந்தி, சம்பங்கி, கனகாம்பரம், துளசி போன்றவை பயிரிட
ஏற்ற சூழ்நிலையும், தட்ப வெப்பமும் நிலவுகிறது. மல்லிகை சீசனுக்கு நாள் ஒன்றிற்கு அதிகபட்சமாக எட்டு டன் வரை சந்தைப்படுத்தப்படுகிறது.

**செண்டு செவ்வந்தி**

இதன் பூர்வீகம் தாய்லாந்து. இதன் ஒரு விதை 2 ரூபாய், நாற்று 3 ரூபாய்க்கு கிடைக்கிறது. விக்கிரமங்கலம், அ.கோவில்பட்டி, மேலப்பெருமாள்பட்டி உட்பட 20 கிராம பகுதிகளில் செண்டு செவ்வந்தி பூச்செடி சாகுபடி செய்யப்படுகிறது.
-சோழவந்தான், விக்கிரமங்கலம் பகுதியில் பருவமழை பொய்த்தாலும் கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள செண்டு செவ்வந்தி விவசாயிகளுக்கு நல்ல வாழ்வாதாரமாக உள்ளது.நான்கு மாத பயிரான இப்பூச்செடி பயிரிட ஒரு லட்சம் ரூபாய் செலவழித்தால் நான்கு மாதத்தில் 8 டன் பூ உற்பத்தி மகசூலுடன் 4 லட்சம் ரூபாய் கூடுதல் லாபம் பெறலாம், என்கிறார்கள் விவசாயிகள்.

**நறுமண ஆலை வருமா**

உசிலம்பட்டியில் மல்லிகை, சம்பங்கி, ரோஜா, கோழிக்கொண்டை உள்ளிட்ட பூக்கள் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றன. அல்லிகுண்டம், இ.கோட்டைப்பட்டி, நக்கலப்பட்டி, பூச்சிபட்டி, கல்யாணிபட்டி, கல்லூத்து, மேலப்பெருமாள்பட்டி, விக்கிரமங்கலம் பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை காலத்தில் விவசாயிகளுக்கு கை கொடுப்பது பூ

விவசாயம் தான்.

தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க சொட்டுநீர், ஸ்பிரிங்ளர் பாசனம் கொண்டு விவசாயம் செய்கின்றனர். சராசரியாக லாபம் தரும் விவசாயம் என்றாலும், சில நாட்களில் பூக்களின் விலை வீழ்ச்சியடைவதால் செய்த வேலைக்கு கூலி கிடைக்காமல் விவசாயிகள் பாதிப்படைகின்றனர்.

உத்தப்பநாயக்கனுார் பகுதியில் சென்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**மயக்கும் மனோரஞ்சிதம்**

பெயரிலும் வசீகரம் கொண்டது மனோரஞ்சிதம். வேடர்புளியங்குளத்தில் பல ஏக்கரில் இதன் சாகுபடி நடக்கிறது. கடவுளுக்கு உகந்ததாக கருதப்படும் இந்த பூவிற்கு மவுசு அதிகம். மற்ற பூக்களின் விலை எடை அளவிற்கு இருக்கும் போது இதற்கு மட்டும் எண்ணிக்கை வைத்து விலை

நிர்ணயம் செய்யப்படுகிறது.

முதலிரவு அறைகளில் அமைக்கப்படும் மலர் பந்தல்களில் விதவிதமான பூக்கள் இருந்தாலும், அதில் சில மனோரஞ்சிதம் பூக்கள் இருந்தால் அதன் வாசமே அறையை ஆளுமை செய்யும் ஆற்றல் கொண்டது. மதுரையில் கிடைக்கும் இந்த பூவிற்கு வெளியிடங்களில் முன்பதிவு செய்து மக்கள் வாங்குகிறார்கள்.

**பூக்கள் சாகுபடியில் சவால் :**

மதுரை மாவட்டத்தில் பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் சிறப்பாக இல்லை. சாகுபடிக்கு ஏற்ற காலநிலை எப்போதும் இல்லாததும், கடும் வறட்சியும், பூச்சிகள்
தாக்குதலும், உரங்களின் விலை உயர்வும், நவீன தொழில்நுட்பங்கள் குறித்த வழிகாட்டுதல்கள்
விவசாயிகளுக்கு முழுமையாக கிடைக்கவில்லை. பரீட்சாத்த முறையில் தான் இந்த பூக்கள்
சாகுபடியை தொடர்ந்து அதை கைவிடமுடியாமல் பெருவாரியான விவசாயிகள் தொடர்கிறார்கள்.
பூக்களை பாதுகாக்கும் குளிர்சாதன வசதியுடன் கூடிய கிட்டங்கி, நறுமண ஆலைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அரசு உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு விவசாயிகளிடமும் உள்ளது.

**மனதை வருடும் மெல்லிய மனம்!**

பூக்களில் 'மல்லிகை பூ'விற்கு தான் முதலிடம். மனதை வருடும் மணம் கொண்ட இப்பூக்களுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் உள்ளது.மல்லிகையின் மென்மையான மணம் வெளிநாட்டினரை வெகுவாக ஈர்ப்பதற்கு முக்கிய காரணம், குளிர் மற்றும் கோடை காலங்களுக்கு ஏற்ற மலராக இருப்பது தான். தூய வெண்மை, ரசனைக்கு ஏற்ற அளவுள்ள இம்மலர்களை அதிகம் நேசிக்கின்றனர். 'சென்ட்' ஆகவும் அதிகம்

பயன்படுத்துகின்றனர்.

மல்லிகை பூச்சரம் நார்களால் கட்டப்பட்டு, வாழை இலையில் மடித்து 'பேக்கேஜ்' செய்தால் தான் அதன் குணமும் மணமும் மாறாமல் இருக்கும். ஆனால் தற்போது நூல், பிளாஸ்டிக் நார்களால் பூச்சரம் கட்டப்பட்டு, பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்படுகின்றன. இது சுற்றுச்சூழலை பாதிக்கும். இதை தவிர்த்து மெல்லிய மல்லிகையின் பாரம்பரியத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

மலர்களிலேயே வாடிய பின் துர்நாற்றம் வீசாத பூ, மல்லிகை தான்.மருத்துவ குணம் கொண்ட இப்பூக்களை தற்போது நவீனம் என்ற பெயரில் 'டை' மூலம் புளூ, கிரீன் என கலர் கலர் பூக்களாக மாற்றுகின்றனர். இது தடுக்கப்பட வேண்டும்.

கலர் செய்யப்பட்ட மல்லிகை பூக்களை பெண்கள் தலையில் சூடக்கூடாது. சுவாமி பூஜைக்கு வைக்கக்கூடாது. அரசு சார்ந்த அமைப்புகள் மூலம் இதன் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தால் மல்லிகை விவசாயிகள் வாழ்வு வளம் பெறும்.

**உமா கண்ணன் 'மதுரை மல்லிகை' புத்தக ஆசிரியர் மற்றும் ஆராய்ச்சியாளர்**

**'பொக்கே' மலர்களுக்கு மவுசு**

**மதுரை சொக்கிகுளம் 'ஸ்பிரிங் புளூம் பொக்கே ஷாப்' சுவாமிதா கூறியதாவது:**

மதுரையில் விற்பனையாகும் வழக்கமான மலர்களுக்கு ஈடாக, 'பொக்கே' மலர்களுக்கான மவுசும் அதிகமாக தான் உள்ளது. நாங்கள் பெங்களூரு, கேரளாவிலிருந்து ஆஸ்டர், கிரிசாந்தம், கிளாடியோலஸ், ஜெரிபிரா, புளூடேசி, ஆர்கிட்,

ரோஜா போன்ற மலர்களில் வாங்கி பொக்கே செய்கிறோம்.
திருமணம், பிறந்தநாள், அலுவலக பார்ட்டிகளுக்கு இவ்வகை பூக்களில் செய்த மலர் கொத்துக்களை அதிகம் வாங்கிச் செல்கின்றனர். அலுவலக வரவேற்பு அறைகளில் 'பிளவர் பேஸ்கட்' வைக்கும் பழக்கமும் அதிகரித்துள்ளது.
மதுரையில் பொக்கே மலர்களுக்கான மார்க்கெட் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால் இங்கு இந்த மலர்கள் சாகுபடி இல்லை. நவீன தொழில்நுட்பங்கள், பசுமை குடில்கள் அமைத்து அந்த மலர்களை இங்கும் சாகுபடி செய்தால் எளிதாக, குறைந்த விலையில் வாங்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**மலர்களில் மலரும் உறவுகள்**

மதுரை பெண்கள் பலர் மல்லிகை பூக்களை விரும்பி சூடிக்கொள்வதோடு, அதை கட்டுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இன்றும் கிராமங்களில் பெண்கள் ஒன்று கூடி அமர்ந்து பூ கட்டுவதை நம்மால் பார்க்க முடியும். கிராமங்களில் மட்டுமல்ல மதுரையின் நகர் பகுதி பெண்களில் சிலர் தங்கள் கைகளால் கட்டிய பூக்களையே சூடிக்கொள்ளவும், இறை வழிபாட்டிற்கும் பயன்படுத்துகின்றனர்.
அந்த வகையில் எங்கள் வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு உறவினர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பூ கட்டும் பழக்கத்தை பாரம்பரியமாக கடைபிடித்து வருகிறோம். மலர்களோடு முகம் மலர்ந்து பேசிக்கொண்டே கட்டும் போது உறவுகளும் மலர்ந்து

மணம் வீசும் என்பதில்
சந்தேகமில்லை.

**என். ராதிகா, குடும்பத் தலைவி**

**வளம் தரும் மலர்கள்**

மண்வளம், தண்ணீர் மற்றும் தட்ப வெப்பமும் சாதகமாக இருப்பதால் மற்ற பகுதிகளில் விளையும் மல்லிகை யை விட மதுரை மல்லிகைக்கு மணமும், தரமும் அதிகம். குளிர்காலங்களில் மல்லிகைக்கு வரவேற்பு இருக்கும். மல்லிகை உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை சார்பில் மல்லிகை கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

எக்டேருக்கு 16,000 ரூபாய் மானியம் உண்டு. பசுமைகுடில், நிழல்வலை மையங்கள் என உயர் தொழில் நுட்பங்களை பின்பற்றி மல்லிகை சாகுபடி செய்தால் அதிக வருவாய் ஈட்ட முடியும். காய்கறி, பழங்கள் சாகுபடிக்கு இணையாக மலர்களையும் சாகுபடி செய்து வருவாய் ஈட்டப்படுகிறது.

**பூபதி, துணை இயக்குனர்**

**தோட்டக்கலைத்துறை**